**<u>தேதி - 11.10.2022 E.O.P.No.78/2020 ம.சா.1 (வசந்தி)</u>**

**<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை:-</u>**

நான் வெற்றி பெற்றதை தோல்வி பெற்றதாக அறிவித்ததால் இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் பனிரெண்டாம்வகுப்பு படித்துள்ளேன். ஆனால் வீட்டுக் குடித்தனம் தான். என்னுடைய கணவர் அரசுப்பணியில் பணியாற்றி வருகிறார். நான் கொட்டாம்பட்டி ஊராட்சிஒன்றியத்தில் 4வது வார்டு ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிக்காக போட்டியிட்டேன். அந்த காலகட்டத்தில 1ம் எதிர்மனுதாரரால் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்களின் மேற்பார்வையின் கீழ் 3ம் எதிர்மனுதாரரால் தேர்தல் நடத்தப்படும் எனறு அறிவிக்கப்பட்டது என்றால் சரிதான். 27.12.2019ம் தேதியன்று மேலூர் தாலுகா கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.4 க்கு முதற்கட்டமாக தேர்தல் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.4 ல் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை என்ன என்றால் 4,000 க்கு மேல் இருக்கும். சரியாக எனக்கு ஞாபகமில்லை. கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.4 ல் எத்தனை வாக்குச்சாவடிகள் இருந்தது என்று சொன்னால் ஆறு வாக்குச்சாவடிகள் இருந்தது. 27.12.2019ம் தேதியன்று கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.4 ல் எத்தனை வாக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் 3,088 வாக்குகள் பதிவானது. வேட்புமனு, மனு பரிசீலனை, சின்னம் ஒதுக்கீடு போன்ற நடைமுறைகள் அனைத்தும் 1,2 எதிர்மனுதாரர்களின் மேற்பார்வையில் 3ம் எதிர்மனுதாரரால் நடத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாக்குப்பதிவு நடந்த அன்று அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவு நடந்தது என்று சொன்னால் சரிதான். வாக்குப்பதிவு நடந்த அன்று என்னுடைய கட்சி சார்பாகவும் முகவர்களை நியமித்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். வாக்குப்பதிவு முடிந்தவுடன் என்னுடைய முகவர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் வாக்குப்பெட்டி மூடி முத்திரையிடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாக்குப்பதிவு நடந்து கொண்டிருக்கும் போதே பிரச்சனை ஏற்பட்டு காவலர்கள் வந்து பிரச்சனையை சரி செய்த பிறகு அரைமணி நேரம் வாக்குப்பதிவு நடைபெறாமல் நிறுத்தப்பட்டு பின்னர் தான் வாக்குப்பதிவு நடைபெற்றது. மேற்படி விபரங்களை நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வாக்குப்பதிவின் போது பிரச்சனை நடந்தது குறித்து காவலர்களிடம் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் வாக்குப்பதிவு மையத்தில் பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று

சொன்னால் சரியல்ல. வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பெட்டிகள் அனைத்தும் கொட்டாம்பட்டி மேல்நிலைப்பள்ளிக்கு கொண்டு செல்லப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாக்குப்பெட்டிகள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள ஒரு அறையில் வைத்து மூடி அரசு முத்திரையிடப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.